டக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 03.07.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 178 பக்கங்கள் : 08

## இலங்கையின் அபிவிருத்திக்கு தோள் கொடுக்கச் சீனா தயார்!




### தூதுவர் கீ சென்ஹொங் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 03

இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா மேலும் கூடுதலான பங்களிப்பை வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் 105 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் கொழும்பில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே தூதுவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, பல தற்போதைய மற்றும் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றிய தூதுவர் கீ சென்ஹொங், சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற வெற்றிகரமான

07

## ஜூலை 20 முதல் செப்ரெம்பர் வரை "எல் நினோ" கடுமையாகத் தாக்கும்!

### பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை




யாழ்ப்பாணம், ஜூலை. 03

பசுபிக் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள "எல் நினோ" இலங்கையில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் மிகக் கடுமையாகத் தாக்கும் என்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த கமக்காரர் அமைப்பு மற்றும் மீனவசங்கங்களின் பிரதிநிதிகளுக்கு எல்நினோ தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு ஏற்படப்போகும்

07

## சீனாவின் பொருளாதார சீர்திருத்தம் இலங்கைக்கு மிகச்சிறப்பான பாடம்!



### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 03

சீனாவின் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அபிவிருத்தி மாதிரியிலிருந்து இலங்கை கற்றுக்கொள்ளவேண்டிய பல பெறுமதிமிக்க பாடங்கள் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், நவீனமயமாக்கல், புத்தாக்கம் மற்றும் திட்டங்களைச் செயற்படுத்துவதில் சீனா

07

## ஒவ்வொரு 3 மணித்தியாலத்துக்கும் 4 பேர் விபத்துக்களினால் உயிரிழப்பு!

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஜூலை. 03

நாட்டில் பல்வேறு விபத்துகள் காரணமாக தினமும் சராசரியாக சுமார் 30 பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் விசேட மருத்துவ நிபுணர் சமித்த சிறிதுங்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 8,000

07

## பண வீக்கம் 6.8 வீதமாக உயர்வு!

கொழும்பு, ஜூலை. 03

மத்திய கிழக்குப் பிராந்திய மோதல்களை அடுத்து, உள்நாட்டுப் பொருள்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் கடந்த மே மாதம்

07

## சமாதான குறியீட்டு முன்னேற்றத்துக்கு இணையாக சீர்திருத்தங்களிலும் இலங்கை முன்னேற வேண்டும்!

### தேசிய சமாதான பேரவை வலியுறுத்துகிறது

கொழும்பு, ஜூலை. 03

2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சமாதானக் குறியீட்டில் (Global Peace Index) இலங்கை 97 ஆவது இடத்திலிருந்து 67 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளமைக்காக அரசாங்கத்தையும் இலங்கை மக்களையும் வாழ்த்தியிருக்கும் தேசிய தேசிய சமாதானப் பேரவை, இந்த முன்னேற்றமானது நிறைவடையாமல் இருக்கும் ஜனநாயக சீர்திருத்தங்களை முழுமைப்படுத்துவதற்கான உந்துதலைக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

இது தொடர்பில் தேசிய சமாதான பேரவை வெளியிட்டிருக்கும் அறிக்கையில்

07

## அர்ச்சுனா எம்.பிக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்காக எதிர்வரும் ஒகஸ்ட் 31ஆம் திகதி அழைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

"அபினவ நிவஹல் பெரமுன"வின் தலைவர் ஓஷல ஹேரத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் விசாரணைக்கு

07

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருணவிடம் 4 மணி நேரம் விசாரணை

கொழும்பு, ஜூலை. 03

கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர, சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் "கெஹெல் பத்தர பத்மே"வுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணையின்

07

## ஜனாதிபதி பாவித்த அம்புலன்ஸ் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு!

கொழும்பு, ஜூலை. 03

ஜனாதிபதியின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சொகுசு அம்புலன்ஸ் வாகனம், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் அவசரச் சிகிச்சை மற்றும் நோயாளி போக்குவரத்துச் சேவைகளை வலுப்படுத்துவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையளிப்பு நிகழ்வு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் நடைபெற்றது.

முன்னதாக இந்த அம்புலன்ஸ் வாகனம் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

07

## மணற்காடு சந்தி விபத்து; ஐந்து பேருக்கு படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 03

வடமராட்சிக் கிழக்கு மணற்காடு சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில், 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆசிரியர் இருவரும், பாடசாலைக்கு பிள்ளையை ஏற்றிச் சென்ற தாய் ஒருவரும், அவரது இரண்டு பிள்ளைகளும் படுகாயமடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் ஆசிரியர் ஒருவரும், பிள்ளைகளை ஏற்றி சென்ற தாயாரும், மேலதிக சிகிச்சைகளுக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவிடம் மாயக்கோல் கையளிக்கப்படவில்லை!

## வங்குரோத்தடைந்த திறைசேரியே ஒப்படைக்கப்பட்டது என்கிறார் சமரசிங்க



கொழும்பு, ஜூலை. 03

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றபோது அவரிடம் மாயக்கோல் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாறாக, வங்குரோத்தடைந்த திறைசேரியே ஒப்படைக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் - விஜயபுர பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

புதிய அரசாங்கம் ஆட்சி பொறுப்பை ஏற்று சுமார் இரண்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், இந்த இரண்டு வருடங்களுக்குள் அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வாகனங்கள், உரம், எண்ணெய்யை உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத சூழ்நிலையிலேயே அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றார் எனவும் அமைச்சர் வசந்த சமரசிங்க கூறினார்.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியும் ஸ்தம்பிதமடைந்திருந்தமையே உண்மை நிலைமையாக இருந்தது என அமைச்சர் வசந்த சமரசிங்க சுட்டிக்காட்டினார். (அ)

# மாணவர்களுக்கு 3,000 ரூபாய் பெறுமதியான காலணி வவுச்சர்

கொழும்பு,ஜூலை 03

எதிர்வரும் 2027ஆம் ஆண்டுக்காகத், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள், பிரிவெனாக்கள் மற்றும் சீலமாதா கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கு தலா ஒரு சோடி காலணிகளை வழங்குவதற்கான திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு இந்த அனுமதி கிடைத்துள்ளது.

தகுதியுடைய ஒவ்வொரு மாணவருக்கும் காலணிகளைக் கொள்வனவு செய்வதற்காக தலா 3,000 ரூபாய் பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

2026ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட முறைமைப் போன்றே இம்முறையும் விநியோகம் இடம்பெறும்.

மேல், தென், சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் ஊடாக பாடசாலை மட்டத்திலேயே காலணிகள் விநியோகிக்கப்படும்.

மத்திய, வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மாணவர்கள் சந்தையிலிருந்து நேரடியாகக் காலணிகளைக் கொள்வனவு செய்ய முடியும்.

இந்த திட்டத்தை 2026ஆம் ஆண்டின் மூன்றாம் பாடசாலைத் தவணை முடிவடைவதற்குள் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் (2025/2026) இரு வேறு கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த உதவித் திட்டத்தின் மூலம் 836,571 பாடசாலை மற்றும் பிரிவெனா மாணவர்கள் பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்கள் தவணை முறையில் அரிசி வாங்கும் நிலையில்!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 03

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதுடன், இன்று மக்கள் தவணை முறையில் அரிசி வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.

கொழும்பு நெலும் மாவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடனான கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1.2 மில்லியன் ரூபாய்க்கு டொயோட்டா விட்ஸ் கார் வாங்க முடியும் என்று முன்னர் வாக்குறுதி அளித்திருந்த அரசாங்கம், இளைஞர்கள் ஜப்பானிய மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்துவதாகவும் உறுதியளித்திருந்தது.

ஆனால், இன்று கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் 20 கிலோகிராம் அரிசியை வழங்கும் நிலையைத்தான் அரசாங்கம் எட்டியுள்ளது. பொதுமக்கள் எதிர்பார்த்த மாற்றம் இதுதானா?.

இலங்கை ஒரு காலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்ததை நினைவு கூர்ந்த நாமல், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் நிர்வாகக் காலத்தில் நெல் உற்பத்தி உபரியாகக் காணப்பட்டது.

மேலும், அந்தக் காலத்தில் 350 ரூபாய்க்கு உரம் கிடைத்தது. ஆனால் இன்று விவசாயிகள் உரத் தட்டுப்பாடு மற்றும் தங்கள் அறுவடைக்கு குறைந்த விலை கிடைக்கும் நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

உள்நாட்டு அறுவடைக் காலங்களில் வெளிநாடுகளில் இருந்து காய்கறிகள் மற்றும் பழங்களை இறக்குமதி செய்வதன் மூலம், தற்போதைய அரசாங்கம் உள்ளூர் விவசாயிகளை மேலும் நலிவடையச் செய்துள்ளது -என்றார். (அ)

# கடும் தாதியர் பற்றாக்குறையால் தரமான சுகாதார சேவை ஆபத்தில்!

## அரச தாதியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 03

நாட்டில் நிலவும் கடுமையான தாதியர் பற்றாக்குறை மற்றும் தாதியர் கல்வித்துறையின் வீழ்ச்சி காரணமாக எதிர்காலத்தில் கல்வித் தரத்தில் குறைந்த தாதியர்களே உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அரச தாதியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு எதிராக அரச ஆசிரியர் சங்கத்தினால் மனித உரிமை ஆணைக்குழுவில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டமையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய கருத்து தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது 65,000 தாதியர் சேவையில் இருக்க வேண்டிய இடத்தில் வெறும் 37,000 தாதியர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். அத்துடன் தாதியர் கல்லூரிகளில் நிலவும் சுமார் 150 விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு சுகாதார அமைச்சிடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும் அதற்குரிய தீர்வுகள் இதுவரை வழங்கப்படவில்லை. விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதற்கான தேர்வுகள் இன்னும் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

முறையாக கல்வி மற்றும் தகுதியான விரிவுரையாளர்கள் இல்லாத சூழலில் கல்வித் தரத்தில் குறைந்த மற்றும் போதிய பயிற்சியற்ற தாதியர்களே உருவாக நேரிடும்.

இவ்வாறு பயிற்சியற்ற தாதியர்களை உருவாக்கி மக்களுக்கு முறையற்ற சுகாதார சேவையை வழங்கி பொதுமக்கள் மேலும் இக்கட்டான நிலைக்குள் தள்ளவே சுகாதார அதிகாரிகளும் அரசாங்கமும் முயற்சிக்கிறது.

மேலும், கடுமையான தாதியர் பற்றாக்குறை காரணமாக தற்போது சேவையில் உள்ள தாதியர் 6 மணித்தியாலங்கள் பணியாற்றவேண்டிய இடத்தில் 12 தொடக்கம் 18 மற்றும் 24 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறான பணிச்சுமை காரணமாகவே கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் கிண்ணியா வைத்தியசாலையில் தாதியர் ஒருவர் தவறான முடிவை எடுத்துக்கொண்டார்.

எனவே உடனடியாக தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து விரிவுரையாளர்களை நியமிப்பதன் மூலம் தாதியர் கல்வித்துறையை சீரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (அ)

# தனியார்துறையில் 4 இலட்சம் தொழிலாளர்கள் பற்றாக்குறை

## வெளிநாட்டு ஊழியர்களை நியமிக்கும் நிலை

கொழும்பு, ஜூலை. 03

நாட்டின் தற்போது தனியார் துறையில் 4 இலட்சத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் காலியாக காணப்படுகின்றன. இதனால் திறன்மிக்க மற்றும் திறனற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் இளைய தலைமுறையினரை போதைப்பொருள் ஆபத்துகளில் இருந்து பாதுகாத்து அவர்களை உற்பத்தி திறன்மிக்க பிரஜைகளாக மாற்றுவதை நோக்கமாக கொண்டு தேசிய அளவிலான புதிய வேலைத்திட்டமொன்று அதிகாரபூர்வமாக நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக போதைப்பொருளுக்கு அடிமையாகி பின்னர் தகுந்த சிகிச்சை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் முழுமையாக புனர்வாழ்வளிக்கப்பட்ட எமது நாட்டு இளைஞர், யுவதிகளை தனியார்துறையில் நிரந்தரப் பணியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

மேலும், தற்போது நாட்டில் உள்நாட்டு தொழில்துறைத் துறைகளான கட்டுமானம், ஒடுகள் மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தி, மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி, காலணிகள் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 4 இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் காலியாக உள்ளன.

உள்நாட்டில் நிலவும் திறன்மிக்க மற்றும் திறனற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாகவும், பொருளாதாரத்தை நிலைநாட்டவும் இந்த காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் ஊழியர்களை அமர்த்த வேண்டிய ஒரு கட்டாய நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் இருந்தும் பணியாளர்களை அமர்த்துவது போல் எமது நாட்டின் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் முறையான பயிற்சி திட்டங்களை வழங்கி உள்நாட்டு தொழிற்துறைகளில் நிலவும் பற்றாக்குறைக்கு நிலையான தீர்வு வழங்கப்படவேண்டும் -என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
03.07.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பதின்ம வயதினர் பாதிக்கப்படும் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

வீதி விபத்துக்களில் மரணங்களும் ஆட்கள் காயமடையும் சம்பவங்களும் இடம் பெறாமல் ஒரு நாள் கூட இப்போது கடந்து. விடுவதில்லை. இலங்கையில் வருடாந்தம் வீதி விபத்துக்களின் விளைவாக வருடாந்தம் சுமார் 10 ஆயிரம் பேர் மரணமடைவதாக சுகாதாரத்துறை தரவுகள் மூலம் அறியக்கூடியதாக. இருக்கிறது.

பதின்ம வயதினர் சம்பந்தப்பட்ட வீதி விபத்துக்கள் அண்மைக் காலமாக கடுமையாக அதிகரித்திருப்பதாகவும் இது நாடு எதிர் நோக்குகின்ற பாரதூரமான பொதுப் பாதுகாப்பு நெருக்கடியாக உரு வெடுத்திருப்பதாக சமூக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை செய்கி றார்கள்.

சுகாதாரத்துறையின் இந்த எச்சரிக்கை ஒரு கவலைக்குரிய போக்கை வெளிக்காட்டுகிறது. இறப்பு புள்ளி விபரங்களை ஆராயும் போது 85 வயதில் ஒருவர் இறப்பதற்கும் 14 வயதில் ஒரு உயிர் பிரிவதற்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. தவிர் க்கக்கூடிய, தடுத்து நிறுத்தக்கூடிய விபத்துக்களினால் பதின்ம வயதி னரை இழப்பது என்பது பல தசாப்தகால மனித ஆற்றல், படைப் பாற்றல் மற்றும் சமூகப் பங்களிப்பை இழப்பதாகும்.

இத்தகைய விபத்துக்கள் ஏற்படுத்தும் பொருளாதாரச் சுமையை மருத்துவ நிபுணர்களும் பொருளாதார நிபுணர்களும் சுட்டிக் காட் டுகிறார்கள். இந்த பொருளாதாரப் பாதிப்பு என்பது உடனடி மருத்துவ மனைச் செலவுகள் அல்லது சிகிச்சைச் செலவுகளுடன் மாத்திரம் முடிந்துவிடுவதில்லை.

காயமடையும் இளைஞர்கள் எதிர்காலத்தில் தொழில் வாய் ப்புக்களில் ஈடுபட முடியாமல்போவது ஒருபுறமிருக்க, அவர்களை முழு நேரமாகக் கவனித்துக் கொள்வதற்காக பெற்றோருக்கு ஏற்படும் செலவுகள் மற்றும் இதர பிரச்சினைகள் பொதுவில் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தையும் பாதிக்கின்றன.

வீதி விபத்துக்களின் விளைவான மரணங்களையும் காயடைந்து பிறகு ஊனமுற்றவர்களாக வாழவேண்டிய நிலைக்கு உள்ளாகுப வர்களின் அவலத்தையும் தனிநபர்களின் துர்ப்பாக்கியமாகப் பார்க்காமல் ஒட்டுமொத்த சமூகத்தின் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும்.

வீதி விபத்துக்களை தடுப்பதற்காக மக்கள் மத்தியில் செய்யப் படுகின்ற வெறும் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மாத்திரம் பதின்ம வயதினரின் நடத்தையை மாற்றிவிடாது.

கடுமையான போக்குவரத்துச் சட்ட நடைமுறைப்படுத்தல், பாதுகாப்பான பாதசாரி உட்கட்டமைப்புக்கள் அவசியமாகிறது.

# நவீன அரசியல், பேச்சுக்களாக நினைவில் வைக்கப்பட முன்னர் காட்சிகளாகவே நுகரப்படுகிறது



இந்திய தமிழ்நாட்டு அரசியல் ஒரு "மல்டிபிளக்ஸ்" (திரையரங்க வளாகம்). அங்கு சிகரெட்டை சுண்டிவிடுவதும், கருப்புக் கண்ணாடியும் எப் போதுமே மாறாத அடையா ளங்கள்.

சில நாட்களுக்கு முன்பு தமிழ்நாடு சட்டமன்றத்தில், முதலமைச்சர் ஜோசப் விஜய், "எல்லாம் முடிந்தது" என்ற பாணியிலான முன்னாள் முதல மைச்சர் மு.க. ஸ்டாலினின் புகழ்பெற்ற கை சைகையை மீண்டும் செய்து காட்டினார். இதைப் பார்த்த தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) அமைச்சர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் ஏதோ திரையரங்கில் முதல் நாள் முதல் காட்சி பார்ப்பதைப் போல ஆரவாரம் செய்தனர் அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் தன் நாற்காலியை விட்டு குதித்துவிடாத குறைதான்.

மறுநாள், 400க்கும் மேற்பட்ட டி.என். பி.எஸ்.சி தேர்வாணையம் மூலம் தெரிவான வர்களுக்குப் பணி நியமனக் கடிதங்களை வழங்கியபோது, முதலமைச்சர் கைகளால் "இதய" சைகையையும் வேறு பல சைகைக ளையும் செய்தார். அரசியலுக்குப் பாவனை (நாடகம்) என்பது புதியதல்ல, ஆனால் விஜய் வழக்கமான அரசியல்வாதிகளின் "விறைப் பான" பாணியை உடைப்பதில் உறுதியாக இருப்பது போல் தெரிகிறது.

இந்திய அரசியலில், அதிகாரம் என்பது பெரும்பாலும் மக்களிடமிருந்து தள்ளி இருக் கும் தூரத்தைக் கொண்டே அளவிடப்படுகி றது. தலைவர்கள் நீண்ட வாகனப் பேரணிக ளில் செல்கிறார்கள், கஞ்சி போட்ட வெள்ளை ஆடைகளை அணிகிறார்கள், அரசியல் மேடை களைத் தாண்டி மிகக் குறைவாகவே பேசுகி றார்கள், மேலும் தங்களை அணுக முடியாத ஒரு பிம்பத்தைப் பராமரிக்கிறார்கள்.

அவர்கள் எவ்வளவு குறைவாகப் புன்னகை க்கிறார்களோ (கேமராக்களுக்கு முன்னால் நிறையவே சிரித்தாலும்) அவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். பெரும்பாலான அரசியல்வாதிகள் தங்களுக் குள் ஒரு விறைப்புத் தன்மையை கவனமாக வளர்த்துக்கொள்கிறார்கள்.

விஜய், தனது கருப்பு - வெள்ளை உடைத் தேர்வைத் தவிர, மற்றவர்களிடமிருந்து பெரிய அளவில் வேறுபடவில்லை என்றா லும், உடல் மொழியைப் பொறுத்தவரை, அவருக்குள் இருக்கும் நடிகர் அவ்வப்போது எட்டிப் பார்க்கிறார். ஊழியரின் தோளில் கையைப் போடுவதாக இருக்கட்டும், குழந் தைகளுக்குப் புன்னகையுடன் போலியோ சொட்டு மருந்து வழங்குவதாக இருக்கட்டும் அல்லது மேடைக்கு வர சிரமப்பட்ட ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் அருகே அவரே நேரில் நடந்து சென்று பணி நியமனக் கடித த்தை வழங்குவதாக இருக்கட்டும், விஜய் ஒரு மனிதநேயமிக்க, படிநிலைகளைக் கடந்த, எம்.ஜி.ஆர் பாணி தலைமையைக் காட்ட முயற்சிக்கிறார்.

இந்த பாணி, டி-சர்ட் அணியும் தலைமை நிர்வாக அதிகாரிகள், எதிராளிகளைக் கட்டிப் பிடிக்கும் விளையாட்டு வீரர்கள் மற்றும் சமூக ஊடகங்களில் தங்களின் இயல்பான வீடியோக்களைப் பதிவிடும் உலகத் தலைவர் களைப் பார்த்துப் பழகிய இளம் வாக்காளர்க ளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அவர்களைப் பொறுத்தவரை, இணக்கமான அணுகுமுறை அதிகாரத்தைக் குறைப்பதி ல்லை மாறாக அதை மேம்படுத்துகிறது.

இன்றைய அரசியல் தொடர்பு என்பது பெரும்பாலும் காட்சி சார்ந்தது. நவீன அரசி யல் என்பது பேச்சுகளாக நினைவில் வைக்கப் படுவதற்கு முன்பு, காட்சிகளாகவே நுகரப்படு கிறது. விஜய் தனது சினிமா பின்னணி காரண மாக இதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கி றார் போல தெரிகிறது இதை உதயநிதி ஸ்டாலின் இன்னும் கோலிவுட்டில் இருந்து கற்றுக்கொள்ளவில்லை போலும்.

நிச்சயமாக, அடையாளங்களுக்கு என்று சில எல்லைகள் உள்ளன.

நிர்வாக பலவீனங்களை தங்களின் ஈர்ப்பு விசையுள்ள அணுகுமுறையால் மறைத்த கவர்ச்சிகரமான தலைவர்களால் வரலாறு நிறைந்துள்ளது. சிறந்த காட்சிகள் (optics) ஒருபோதும் மோசமான ஆட்சிக்கு ஈடாக முடியாது. இறுதியில், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்டே அரசாங்கங்கள் மதிப்பிடப்படுகின்றன. பாணியில் (style) சாராம்சம் (substance) இல்லையென்றால் அதற்கு மதிப்பில்லை.

விஜய் திரையிலோ அல்லது அரசியலிலோ இயல்பாக உணர்ச்சிகளை வெளிப்படுத்துபவ ராக அரிதாகவே இருந்திருக்கிறார். எனவே இந்த சைகைகள் இயல்பாக வருவதை விட, ஒரு காட்சித் தன்மையிலிருந்தே (showman ship) வருகின்றன என்று தோன்றுகிறது.

அதனால்தான், சட்டமன்றத்தில் காணா மல் போன தன் தந்தையைத் தேடும் மனித னைப் பற்றிய அவரது "குட்டிக் கதை" (உதய நிதி மற்றும் ஸ்டாலினைத் குறிவைத்த மற்றொரு மறைமுகத் தாக்குதல்), நகைச்சுவை க்கான ஒரு சுமாரான முயற்சியாக அமைந்து எடுபடாமல் போனது (முன்னாள் தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் நையாண்டி நிறைந்த, முக பாவனையற்ற பேச்சுகளையோ, அல்லது சாலையோர அரட்டையோடு அரசி யல் தத்துவங்களைக் கலந்த முன்னாள் கேரள முதல்வர் ஈ.கே. நாயனாரின் பேச்சுகளையோ விஜய் சில பழைய வீடியோக்களில் பார்க்க வேண்டும்).


இயல்பான அணுகுமுறை என்பது திட்ட மிட்டுப் பழகியதாக இருக்கும்போது, அது நிறுவன எல்லைகளை ஒருவித சங்கடமான வழியில் சிதைக்கிறது. விஜய்யின் அதிவேக அரசியல் வளர்ச்சி, அரசியலில் தோற்றமே (perception) பெரும்பாலும் உண்மையாகிவிடு கிறது என்ற கருத்தை வலுப்படுத்தியுள்ளது. அளவிடக்கூடிய உறுதியான நடவடிக்கைகள் இல்லையென்றால், இந்தத் தோற்றத்தைத் தக்கவைப்பது கடினம். தோற்றத்தைத் தக்க வைப்பது மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வளர்த்தெடுப்பதும் கூட சவால் தான் இதை பிரதமர் நரேந்திர மோடி வியக்கத்தக்க முடிவுகளுடன் அயராது செய்து வருகிறார்.

இந்த பாணிக்கு பின்னால் இறுதியில் ஒரு திறமையான ஆட்சி அமைந்தால், விஜய் ஒரு புதிய அரசாங்கத்தை மட்டுமல்ல, ஒரு புதிய அரசியல் கலாசாரத்தையே அறிமுகப்படுத்தி யிருப்பார். அங்கு அதிகாரம் என்பது தூரத் தைச் சார்ந்திருக்காது, விறைப்புத் தன்மைக்கு பதிலாக நம்பிக்கை இருக்கும், மேலும் தலைவர் ஒருவர் மக்களை அச்சுறுத்தாமல் அவர்களின் மரியாதையைப் பெற முடியும்.

பல தசாப்தங்களாக, அதிகாரம் என்பது அச்சுறுத்துவதாக இருக்க வேண்டும் என்றே அரசியல்வாதிகள் நம்பினர். சமூக ஊடகங்கள் மற்றும் பங்கேற்பு ஜனநாயகத்தின் இந்த யுகத் தில், அதிகாரம் மிகவும் மனிதநேயத்துடன் இருக்கும்போதுதான் மிகவும் வலுவாகத் தோன்றும் என்ற வேறுபட்ட கருத்தை விஜய் சோதித்துப் பார்க்கிறார் என்றால் - அவருக்கு நம் வாழ்த்துகள்.

(அருண் ராம், ரைம்ஸ் ஒஃவ் இந்தியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




மேடம்



தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடு வீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

இடபம்



குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

மிதுனம்



குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

கடகம்



மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும் நாள்.

சிம்மம்



குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

கன்னி



புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

துலாம்



எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

விருச்சிகம்



குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

தனுசு



சந்திராஷ்டமகணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். மகிழ்ச்சியான நாள்.

மகரம்



ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

கும்பம்



குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம்.

மீனம்



தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும்.

# காணிகள் விடுவிப்புக்கு ஆதரவாக பிக்குவும் கேப்பாபிலவில் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூலை. 03

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாபிலவில், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் நேற்று ஒன்பதாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.

இந் நிலையில் பௌத்த மத குரு தலைமையிலான சம உரிமை இயக்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பொது அமைப்பினர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

கேப்பாபிலவில் 55 குடும்பங்களுக்குச் சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகள் நீண்ட காலமாக இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள குறித்த காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.



இந்தச் சந்திப்பின்போது காணி விடுவிப்பு தொடர்பான மக்களின் கோரிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு காணி உரிமைக்கான மக்களின் போராட்டத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதோடு, காணி விடுவிப்பு தொடர்பில் தொடர்ந்து குரல் கொடுக்கத் தயாராக இருப்பதாக சம உரிமை இயக்கத்தின் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

அத்துடன் காணி விடுவிப்பை வலியுறுத்தும் கவனயீர்ப்பும் இடம்பெற்றது.

(அ)

## பாகிஸ்தான் பாதுகாப்பு செயலர் முகம்மது அலி இலங்கை வருகை

கொழும்பு, ஜூலை. 03

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான லெப்டினன்ட் ஜெனரல் முஹம்மது அலி, பாகிஸ்தான் - இலங்கை ஆயுதப் படைகள் பாதுகாப்புக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவரையும் அவருடன் வருகை தந்திருந்த பிரதிநிதிக்குழுவினரையும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விதானாராச்சி, மற்றும் இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

6ஆவது பாகிஸ்தான் - இலங்கை ஆயுதப் படைகள் பாதுகாப்புக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை சிறீ ஜயவர்தனபுர, கோட்டேயிலுள்ள பாதுகாப்புத் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள கடற்படை தலைமையகத்தில் ஆரம்பமாக வுள்ளது.

இந்த உயர்மட்ட இருதரப்பு கலந்துரையாடல், இரு நாடுகளுக்குமிடையிலான தற்போதைய பாதுகாப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், பிராந்திய பாதுகாப்பு, இராணுவ ஒத்துழைப்பு, பயிற்சி மற்றும் நீண்டகாலமாக நிலவி



வரும் இலங்கை - பாகிஸ்தான் பாதுகாப்பு கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளிட்ட பரஸ்பர அக்கறை கொண்ட விடயங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்வதற்குமான முக்கிய தளமாக அமையும்.

தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, லெப்டினன்ட் ஜெனரல் முஹம்மது அலி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர மற்றும் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா ஆகியோரை சந்திக்க வுள்ளார்.

(அ)

## டிஜிற்றல் வாக்காளர்களுக்கான கல்விப் பயிற்சி அமர்வு யாழில்!

யாழ்ப்பாணம், ஜூலை. 03

யாழ்ப்பாண மாவட்டத்தில் இளைஞர்களுக்கான டிஜிற்றல் வாக்காளர் கல்விப் பயிற்சி அமர்வு நேற்று முன் தினம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

லேன் பிளே வோட் எனும் கேமிங் செயலியை அடிப்படையாகக் கொண்ட இந்த நிகழ்ச்சி, தேர்தல் செயல்முறை தொடர்பான விழிப்புணர்வை டிஜிற்றல் வழிமுறையில் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

கஃபே ஏசியா நிறுவனத்தின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட லேன் பிளே வோட் செயலியை மையமாகக் கொண்ட இந்த வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி, கபே அமைப்பின் ஏற்பாட்டிலும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவபாலராஜா தினேஷின் ஒருங்கிணைப்பிலும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

கபே அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ஷ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக விரனே ஆசியா நிறுவனத்தின் மூத்த ஆய்வு முகாமையாளர் இசுரு சமரத்துங்க கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின் பிரதம வளவாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் செய்திப் பணிப்பாளரும் டிஜிற்றல் ஊடகப் பயிற்றுவிப்பாளருமான ஜுனைட் எம். ஹாரிஸ் பங்கேற்று, டிஜிட்டல் ஊடகங்கள் மற்றும் தகவல் சரிபார்ப்பின் அவசியம் குறித்து விளக்கமளித்தார்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் அரசறிவியல் துறைத் தலைவருமான கலாநிதி விக்னேஸ்வரன் மற்றும் முன்னாள் பொருளியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சி. உதயகுமார் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு, ஜனநாயகத்தில் வாக்காளர்களின் பொறுப்பு மற்றும் தகவலறிந்த வாக்களிப்பின் முக்கியத்துவம் குறித்துக் கருத்துரைகளை வழங்கினர்.

(அ)

## 78 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைது!



வவுனியா, ஜூலை. 03

வவுனியா - நெடுங்கேணி பகுதியில், 78 கிலோகிராம் கேரளா கஞ்சாவுடன் 31 வயதான இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர், சொகுசு காரில் கேரளா கஞ்சாவை கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. நெடுங்கேணி பெரியகுளம் சந்தி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் சோதனைச் சாவடியில் வாகனம் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, காரிலிருந்து 78 கிலோகிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில், நெடுங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வளர்ப்புப் பிராணிகளை பதிவு செய்வது கட்டாயம்!

## புதிய சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை. 03

நாட்டிலுள்ள வளர்ப்புப் பிராணிகளின் அதிகரிப்பைக் கட்டுப்ப டுத்தவும், விசர்நாய் கடி நோயைத் தடுப்பதற்கான வழி முறைகளைக் கட்டாயமாக்கவும் புதிய சட்ட மூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விசர்நாய் கடி நோயை இல்லாதொழித்தல் மற்றும் வளர்ப்புப் பிராணிகளைப் பதிவு செய்தல் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டத்தின் மூலம், வளர்ப்புப் பிராணிகளைப் பதிவு செய்வது சட்ட ரீதியாகப் பலப் படுத்தப்படவுள்ளதுடன், இது தொடர்பான நிறுவனங்களின் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாக வரையறுக்கப்படவுள்ளன.

குறித்த சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை தீர் மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அரச நிறுவனங்களுக்கு புதிய வாகனங்கள்!

கொழும்பு, ஜூலை. 03

அரச நிறுவனங்களில் நிலவும் வாகனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, அவற்றின் பணிகளை முறையாக முன்னெடுக்கும் நோக்கில் புதிய பயன்பாட்டு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளது.

இதற்கமைய, முதற்கட்டமாக 175 டபிள் கப் வாகனங்கள், 100 நோயாளர் காவு வண்டிகள், 100 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 160 டிப்பர் ரக வாகனங்கள் போன்ற வாகனங்களை புதிய கொள்வனவு நடைமுறைகளின் கீழ் அவசரமாகக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் அத்தியாவசிய தேவைகளைக் கருத்திற்கொண்டு இந்த வாகனக் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மாற்றியமைக்கப்பட்ட பாதுகாப்பற்ற வாகனங்களை கண்டறிய சோதனை!

கொழும்பு, ஜூலை. 03

சட்டவிரோதமாக மாற்றியமைக்கப்பட்ட மற்றும் குறைபாடுள்ள வாகனங்களை கண்டறியும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் கட்டமாக, அதிக ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில், நாடு தழுவிய விசேட வாகனச் சோதனை நடவடிக்கைகளை பொலிஸ் ஆரம்பித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நாடு முழுவதும் இந்த நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அதிகக் கறுப்புப் புகையை வெளியிடும் மற்றும் வீதிப் பயன்பாட்டுக்குத் தகுதியற்ற வாகனங்களின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் எச்சரித்துள்ளது.

(அ)

# பரீட்சார்த்திகளுக்கான தேசிய அடையாள அட்டை விநியோகம் துரிதப்படுத்தப்படும்!

கொழும்பு, ஜூலை. 03

நடப்பு ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் நிரந்தர தேசிய அடையாள அட்டைகளை வழங்கி முடிப்பதற்குத் திணைக்களம் எதிர்பார்ப்பதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஜகத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அடையாள அட்டை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு ஊடாக ஏற்கனவே பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதிபர்கள் எந்த விததாமதமும் இன்றி இந்த விண்ணப்பங்களை திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்யவேண்டும்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, இதுவரை அடையாள அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள், ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்கள் அல்லது மின்னஞ்சல் முகவரிகள் ஊடாக திணைக்களத்தைத் தொடர்புகொண்டு தங்களது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய பரீட்சைகள் தொடங்குவதற்கு முன்னர் அனைத்து மாணவர்களும் செல்லுபடியாகும் அடையாள அட்டைகளை வைத்திருப்பதை உறுதி செய்வதே இந்த விசேட திட்டத்தின் நோக்கம் என ஆட்பதிவுத் திணைக்களம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராக துமிந்த ஹுலங்கமுவ

கொழும்பு, ஜூலை. 03

இலங்கை முதலீட்டுச் சபையின் புதிய தலைவராகவும் அதன் உறுப்பினராகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முதலீட்டுச் சபையின் ஏனைய உறுப்பினர்களாக விஷ் கோவிந்தசாமி, ஹர்ஷனி ரந்திலிகம, மங்கள கருணாரத்ன கே. ஏ. விமலேந்திரராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்கள், ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன. (அ)

# டெங்கு கட்டுப்பாட்டுக்கு புதிய செயற்பாட்டு அறை

## அவசர உதவி எண் அறிமுகம்

கொழும்பு, ஜூலை. 02

டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான தகவல் சேகரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும் நோக்கில், சுகாதார அமைச்சு புதிய டெங்கு செயற்பாட்டு அறை ஒன்றை அமைத்துள்ளது.

இந்த முன்னெடுப்பின் கீழ், டெங்கு பரவல் தொடர்பான தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளை பொதுமக்கள் உடனடியாகத் தெரிவிப்பதற்கும், வழிகாட்டல்களைப் பெறுவதற்கும் 011-7966366 என்ற பிரத்யேக அவசர உதவி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும், நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்முனை வடக்கு வைத்தியசாலைக்கு அதிநவீன ஆர்த்ரோஸ்கோபிக் கருவி!

## 68 மில்லியன் ரூபாய் பெறுமதி கொண்டது

அம்பாறை, ஜூலை. 03

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் எலும்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு 68 மில்லியன் ரூபாய் பெறுமதியான அதிநவீன ஆர்த்ரோஸ்கோபிக் கருவி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின் ஆலோசனைக்கமைய சுகாதார அமைச்சு முன்னெடுத்து வரும் சுகாதார சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த கருவி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் இந்த கருவி வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது.

முழங்கால், தோள்பட்டை மற்றும் கணுக்கால் உள்ளிட்ட மூட்டுகளில் ஏற்படும் பாதிப்புகள், காயங்கள் மற்றும் ஆர்த்ரைட்டிஸ் உள்ளிட்ட எலும்பியல் நோய்களுக்கு குறைந்த வெட்டுக் காயத்துடன் சத்திர சிகிச்சை மேற்கொள்ள இந்த கருவி பயன்படும்.

இதன் மூலம் நோயாளிகளுக்கு குறைந்த வலி, விரைவான குணமடைதல் மற்றும் குறுகிய காலத்திலேயே வீடு திரும்பும் வசதி கிடைக்கவுள்ளது.

பெரிய கல்லாறு முதல் பொத்துவில் வரையிலான கிழக்கு மாகாண மக்களுக்கு இந்த சேவை நேரடியாக பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஆர்த்ரோஸ்கோபிக் சத்திரசிகிச்சைக்காக காத்திருப்பு பட்டியலில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட நோயாளிகளின் சிகிச்சைகள் இனி விரைவுபடுத்தப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைகளின் சுகாதார சேவைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

(அ)

# பனிச்சங்கேணி வாவிக்கரை பூங்கா பொதுமக்கள் பாவனைக்காக திறப்பு

மட்டக்களப்பு, ஜூலை. 03

மட்டக்களப்பு கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட பனிச்சங்கேணி வாவிக்கரை பூங்கா வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச சபை தவிசாளர் க.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உள்ளூராட்சி ஆணையாளர் ராபி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் றிப்கா, சபை செயலாளர் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.


வாகரை பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வாகரை பிரதேச முப்படைகளின் தலைமை அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பூங்காவானது உல்லாசப் பயணிகளை கவரக்கூடிய வகையில் வாகரை திருமலை பிரதான வீதிக்கண்மையில் பனிச்சங்கேணி பாலத்தின் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு -திருகோணமலை வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் இவ்விடத்தில் தரித்து நின்று இளைப்பாறி பொழுது போக்கிச் செல்லக்கூடிய வகையில் பூங்காவானது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நுகர்வோர் அதிகார சபையால் மாணவர்களுக்கு விழிப்புணர்வு



அம்பாறை, ஜூலை. 03

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், பாடசாலை சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் நிந்தவூர் அல் மதீனா (தேசிய பாடசாலை) மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஜாபிர் வழிகாட்டலில் நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நுகர்வோர் உரிமைகள், நுகர்வோர் பொறுப்புகள், நுகர்வோர் பாதுகாப்பு, தொடர்புடைய சட்டங்கள், பொருள்கள் மற்றும் சேவைகளைப் பெறும் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள், தற்போதைய சந்தையில் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களின் விலைகள் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதான வளவாளர்களாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களான முஹம்மட் ஸாஜீத் ஸமான் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விரிவான விளக்கங்களை வழங்கினர்.

மேலும், உயர் தரப் பிரிவு ஆசிரியர்களும் நிகழ்வில் பங்கேற்று மாணவர்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கினர்.

# அம்பாறை எல்லைப் பகுதியில் யானை தாக்கி ஒருவர் படுகாயம்

அம்பாறை, ஜூலை. 03

யானை தாக்கி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட குடும்பஸ்தர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் வளத்தாப்பிட்டி -புத்தங்கல எல்லைப் பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேளாண்மை செய்கைக்காக மரம் ஒன்றில் பரண் அமைத்து யானை காவலில் ஈடுபட்ட குடும்பஸ்தரே யானை தாக்குதலுக்கு உள்ளானார்.

காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர் 42 வயது மதிக்கத்தகக் சுப்ரமணியம் கோவிந்தன் என அடையளாம் காணப்பட்டுள்ளார்.

(அ)

# மதுபானசாலைகள் திடீரென முற்றுகை!

## சட்டவிரோத மதுபானங்கள் பறிமுதல்

மட்டக்களப்பு, ஜூலை. 03

மட்டக்களப்பில் உள்ள சில மதுபானசாலைகளை இலக்காகக் கொண்டு, கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட பொலிஸ் குழுவொன்று நேற்று முன் தினம் மாலை திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இதன்போது, சட்டத்திற்கு முரணாக விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் பெருமளவிலான மதுபானப் போத்தல்கள் அடங்கிய பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

விசேட பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளின் போது, சந்தேகத்திற்கிடமான மதுபானங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பிலிருந்து விநியோகிக்கப்படுவதாக கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுவரி திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக விசேட பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

# திருகோணமலை செல்வநகர்ப் பகுதியில் மாடியில் இருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் பலி!

திருமலை, ஜூலை. 03

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள செல்வநகர் பகுதியில் வீட்டோடு இணைந்ததாக காணப்படும் தேநீர் கடையொன்றின் மேல் தட்டுப் பகுதியிலிருந்து விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவமாது நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தோப்பூர் -பாலத்தோப்பூர் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய சாதீக் றிஸ்வி என அடையாளங் காணப்பட்டுள்ளது.

இவர் தூக்க கலக்கத்தில் தவறி விழுந்தாரா அல்லது வேறு ஏதாவது காரணங்கள் இதன் பின்னால் இருக்கிறதா? என்பது குறித்து பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சம்பவ இடத்திற்கு மூதூர் நீதிமன்ற பதில் நீதிபதி, சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் வருகை தந்து சடலத்தை பார்வையிட்ட பின்னர், சடலம் பிரேத பரிசோதனைக்காக கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# சிறுத்தையால் சுப்பிரமணிக்கும் அடியார்களுக்கும் பாதிப்பு வரலாம்!

## காட்டுக்குள் சுப்பிரமணி செல்வதற்கு வாய்ப்பில்லை வனஜீவராசிகள் திணைக்களம் அறிவிப்பு

அம்பாறை, ஜூலை. 03

"சமகாலத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் கூடுதலாக இருப்பதால் அது சுப்பிரமணிக்கும் (கதிர்காமம் செல்லும் நாய்) அடியார்களுக்கும் பாதிப்பு ஏற்பட நிறைய வாய்ப்புகள் உள்ளன.

எனவே காட்டுக்குள் சுப்பிரமணியை கொண்டு செல்வதற்கு வாய்ப்பில்லை."

-இவ்வாறு வனஜீவராசிகள் திணைக்கள சட்ட ஆலோசகரும்சுற்றாடலியலாளருமான கந்தையா பிரியதர்சனி தெரிவித்தார்.

கதிர்காம பாதயாத்திரைக் குழுவினருடன் வரும் சுப்பிரமணி எனும் செல்லப்பிராணி சமூக வலைத்தளங்களில் உலகளாவிய ரீதியில் பிரபல்யமாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

குறித்த செல்லப்பிராணி பாதயாத்திரை செல்வது பிரச்சினை அல்ல ஆனால் காட்டிற்குள் பயணிக்கும்



சகமனிதர்களின் பாதுகாப்பினையும் பாதயாத்திரை மேற்கொள்ளும் செல்லப்பிராணியின் பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு சுப்பிரமணியை காட்டிற்குள் செல்ல வனஜீவராசிகள் திணைக்களம் அனுமதி வழங்காது எனக் குறிப்பிட்டார்.

காட்டுப்பாதை ஜூலை 9 அல்லது 10 இல் திறப்பதற்கு முன் பாணமையில் வைத்து சுப்பிரமணியை நாம் பொறுப்பெடுத்து பின்னர் பாதை திறக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஆலய குருவின் வேண்டுகோளுக்கு இணங்க அனுமதித்து பின்னர் நாம்

வாகனம் ஊடாக கதிர்காமத்திற்கு கொண்டு செல்வோம்.

அங்கு பிள்ளையாரடி எனும் இடத்தில் பாதயாத்திரை குழுவிடம் சுப்பிரமணியை ஒப்படைக்க இருக்கிறோம்.

அதன் பின்னர் அவர்களில் ஒரு அடியார் சுப்பிரமணியை கொண்டு செல்ல இருப்பதால் பிரச்னை இல்லை -என்றார்.

அத்துடன் உகந்தை காட்டுப்பாதை ஆரம்பிக்கும் பாணமை எனும் இடத்தில் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் விவசாயிகள் இருவர் சிறுத்தை தாக்கி மரணமடைந்துள்ளதாகவும் இரண்டு செல்லப்பிராணிகள் சிறுத்தை தாக்குதலுக்குட்பட்டு மர்மமான முறையில் உயிரிழந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### ஜூலை 20 முதல்...

எல்நினோ நிலையை எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்கதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் கே.அழகக்கோன், பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் இணைப்பாளர் வல்லிபுரம் வாசுகி, கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ சங்க பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

### இலங்கையின் அபிவிரத்தி...

கலந்துரையாடல்களை அடுத்து, சீனா - இலங்கை உறவுகளுக்கான புதிய திட்டவரைபு உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இரு நாடுகளின் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு, சீனா-இலங்கை உறவுகளின் முக்கிய தூணாகும் என்று குறிப்பிட்ட அவர், இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளுடனும் உறவுகளை வளர்த்துக் கொள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

“இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும், இலங்கையில் டிஜிற்றல் நகரங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் சீனா தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. எங்கள் இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்ட உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தவும், இலங்கையின் வளர்ச்சிக்கு மேலும் கூடுதலான பங்களிப்பை வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம்” என்றும் தூதுவர் மேலும் கூறினார். (அ)

### சீனாவின் பொருளாதார...

கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் அவர் பாராட்டியுள்ளார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 105 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் சீர்திருத்தங்கள் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கைகள், அந்த நாட்டை உலகளாவிய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வல்லரசாக மாற்றியுள்ள அதேவேளை, கூட்டுச் செழிப்பையும் ஊக்குவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றத்திற்கு சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான அமைதியான ஒத்துழைப்பு இன்றியமையாதது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்திக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மீள உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

### ஒவ்வொரு 3 மணி...

முதல் 10,000 பேர் வரை பல்வேறு விபத்துகளால் உயிரிழப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சராசரியாக ஒவ்வொரு 3 மணித்தியாலத்திற்கும் 4 பேர் உயிரிழப்பதாகவும் மருத்துவ நிபுணர் சமித்த சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும், போக்குவரத்து விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் பற்றியே அதிகம் பேசப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கீழே வீழ்ந்து ஏற்படும் விபத்துகள், நீரில் மூழ்குதல், மின்சாரம் தாக்குதல் மற்றும் பாம்புக் கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்களாலும் கணிசமான அளவில் உயிரிழப்புகள் பதிவாகுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உயிரிழப்புகளில் பெரும்பாலானவை முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களின் விழிப்புணர்வு மூலம் தடுக்கக்கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தடுப்பதற்குரிய காரணங்கள் இல்லாதமையால் இந்தளவான உயிர்கள் இழக்கப்படுவது தேசிய அளவில் மிகப் பெரிய துயரமான நிலை என்றும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

எனவே, வீடு, பணியிடம், பாடசாலை மற்றும் வீதிகளில் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சின் விசேட மருத்துவ நிபுணர் சமித்த சிறிதுங்க வலியுறுத்தியுள்ளார். (அ)

### அர்ச்சுனா எம்.பி...

எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர் தரப்பின் சட்டத்தரணி அசோக் பரன், மனுவை விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் வகையில் அருகாமையிலான திகதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். அதேவேளை, எதிர் மனுதாரரான பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சார்பில் ஆஜரான சட்டத்தரணி சேனானி தயாரத்னவும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த மனு மீதான விசாரணையை ஒகஸ்ட் 31ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளுமாறு நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அரசாங்க வைத்தியராக பணியாற்றிய ஒருவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவது அரசியலமைப்புக்கு முரணானது என்பதுடன், அது தகைமையீனமாகும் என மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடமாகாண சுற்றுலா மேம்பாடு நேற்று விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை. 03

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சுற்றுலாத் துறை மேம்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்றது.

கடந்த ஜூன் 24ஆம் திகதி அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற சுற்றுலா அபிவிருத்தித் திட்டக் கூட்டத்தின் தொடர்ச்சியாக, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயும் நோக்கில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான சுற்றுலாத்துறை தொடர்பான 2027ஆம் ஆண்டுக்குரிய திட்ட முன்மொழிவுகள் விரிவாக ஆராயப்பட்டன. அத்துடன், மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள சுற்றுலாத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்பட்டது. இதன்போது, வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் குறிப்பாக சுற்றுலாப் பணியகத்தின் ஊடாக நேரடியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஐந்து விசேட திட்ட முன்மொழிவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன், வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கம் தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கூடுதல் கரிசனையுடன் செயற்பட்டு வருவதாகச் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, அமைச்சின் சார்பில் இக்கலந்துரையாடலில் பங்கேற்ற திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் எச்.பி.சோமதிலக, 50 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டைக் கொண்ட திட்டங்களின் திட்ட வடிவமானது கட்டாயமாகத் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நியமங்களுக்கு அமைவாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், முன்மொழியப்படும் அனைத்துத் சுற்றுலாத் திட்டங்களும் துறைசார் சுற்றுலா உபகுழுவிலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலும் முறையான அனுமதியைப் பெற்றிருக்க வேண்டியது கட்டாயம் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

### சமாதான குறியீட்டு...

கூறியிருப்பதாவது:-

உலகளாவிய ரீதியில் சமாதானம் தொடர்ந்து பன்னிரண்டாவது ஆண்டாகவும் வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும், தெற்காசியா உலகின் மிகக் குறைந்த அமைதியைக் கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாக மாறியுள்ள சூழலிலும், இலங்கையின் இந்த சாதனை, ஜனநாயக ஆட்சி முறை, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியவை பலப்படுத்தப்படும் போது முன்னேற்றம் சாத்தியமாகும் என்பதை நிரூபிக்கிறது.

எவ்வாறாயினும், இந்த முக்கியமான சாதனை அலட்சியப் போக்கிற்கு வழிவகுக்கக் கூடாது. மாறாக, இது ஒரு நீதியானதும் நிலையானதுமான சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான, இன்னும் நிறைவடையாமல் இருக்கும் சீர்திருத்தங்களை முழுமைப்படுத்துவதற்கான உந்துதலை வழங்க வேண்டும்.

அடுத்த கட்டமாக, சமாதான தரவரிசையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு இணையாக ஜனநாயகச் சீர்திருத்தம், நல்லிணக்கம் மற்றும் நீதி ஆகியவற்றில் உறுதியான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நீண்டகாலமாக வாக்குறுதியளிக்கப்பட்ட இந்தச் சீர்திருத்தங்களை நிறைவு செய்வது, நிலையான தேசிய அபிவிருத்திக்கு வலுவான அடித்தளத்தை அமைக்கும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாக்குறுதியளித்தபடி நீக்குவதற்கும் அதற்குப் பதிலாக தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கும்

அதேவேளையில், சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு முழுமையாக இணங்கக்கூடிய சட்டத்தை உருவாக்குவதற்கும் அரசாங்கம் வழங்கிய அர்ப்பணிப்பை மதிப்பிற்குரியதாக மாற்ற வேண்டும் என தேசிய அமைதிப் பேரவை வலியுறுத்துகிறது.

மேலும், செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வாராய்ச்சிகள் உட்பட காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை உடனடியாக நிறைவு செய்யுமாறும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எதிர்பார்க்கும் உண்மை மற்றும் நீதியை மேலும் தாமதமின்றி வழங்குமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை முன்னெடுப்பதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தைப் பலப்படுத்த அரசாங்கம் தீர்க்கமாகச் செயல்பட வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை அழைப்பு விடுக்கிறது. இது தொடர்பாக, நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபை தேர்தல்கள் மேலும் சாக்குப்போக்குகள் இன்றி நடத்தப்பட வேண்டும்.

மேலும் தாமதமின்றி தேர்தலை நடத்துவதற்குத் தேவையான மாகாண சபைகள் தேர்தல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான பொறுப்பும் பாராளுமன்றப் பெரும்பான்மையும் அரசாங்கத்திற்கு உண்டு. மக்களால் தெரிவுசெய்யப்படும் மாகாண சபைகளை மீண்டும் நிலைநிறுத்துவது என்பது ஒரு அரசியலமைப்பு கடமை என்பதுடன், ஜனநாயகப் பங்களிப்பை வலுப்படுத்தும். அத்துடன் அது அரசியல் ரீதியில் சகல சமூகங்களையும் அரவணைத்து அதிகாரப் பகிர்வுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக அமையும்-என்றுள்ளது. (அ)

### சிரேஷ்ட பிரதி...

ஒரு பகுதியாக நேற்று அவரிடம் விரிவான வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

### பண வீக்கம்...

5.5 வீதமாகப் பதிவான பண வீக்கம், ஜூன் மாதம் 6.8 வீதமாக உயர்வடைந்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டின் பிரகாரம், கடந்த மே மாதம் 0.9 சத வீதமான உணவுப் பண வீக்கம், ஜூன் மாதத்தில் 3.6 சத வீதமாகவும், மே மாதம் 7.8 சத வீதமாகப் பதிவான உணவல்லாப் பண வீக்கம் ஜூன் மாதம் 8.4 சத வீதமாகவும் உயர்வடைந்தமை, இந்தப் பணவீக்க அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது.

அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஜூன் மாதம் 6.8 சத வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

கடந்த மே மாதம் 3.9 சத வீதமாகக் காணப்பட்டமையப் பண வீக்கம், ஜூன் மாதத்தில் 4.0 சத வீதமாக அதிகரித்துள்ளது. (அ)

### மணற்காடு சந்தி...

மாற்றப்பட்டுள்ளனர்.

குடத்தனை கிழக்கு பகுதியில் இருந்து, குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு தாயார் பிள்ளைகளை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றபோது, மருதங்கேணி நோக்கி ஒரு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு ஆசிரியர்களும் மோதி, விபத்து நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பில், மருதங்கேணி பொலிஸார் விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

### ஜனாதிபதி பாவித்த...

எனினும், தற்போது இது உத்தியோகபூர்வ கடமைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் இருந்ததால், நாட்டின் சுகாதாரச் சேவைத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இந்த வாகனத்தைச் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்க ஜனாதிபதி செயலகம் தீர்மானித்தது.

இதற்கமைய, முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் நலின் பிரேமதாஸவிடம் இந்த நோயாளர் காவு வண்டி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர் மருத்துவர் குமார விக்ரமசிங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விநியோகம்) எச்.எம்.என். தினிப்ரிய ஹேரத், பணிப்பாளர் (போக்குவரத்து) முதித்த விமலசேன உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பொருளாதார மீட்சியில் இலங்கை முன்னேற்றம்!

### உலக வங்கி புதிய தர அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 03

உலக வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய பொருளாதார வகைப்பாட்டின் அடிப்படையில், இலங்கை மீண்டும் உயர் - மத்திய வருமானம் பெறும் நாடு என்ற தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு நாடு எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் இலங்கையின் பொருளாதாரம் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அதன் விளைவாக, நாட்டின் வருமானத் தரமும் குறைந்திருந்தது.

எனினும், அந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் பலனாக, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை மீண்டும் உயர்மத்திய வருமான நாடுகளின் பட்டியலில் இடம்பிடித்துள்ளதாக உலக வங்கியின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

அத்துடன், 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 வீதம் என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உற்பத்தித் துறை மற்றும் கைத்தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள மீட்சியும், நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளதாக உலக வங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

## சிறப்புற நடைபெற்றது மடு அன்னை பெருவிழா

மன்னார், ஜூலை. 03

மன்னார் மாவட்டத்தின் புகழ்பெற்ற மருதமடு அன்னை திருத்தலத்தின் ஆடிப்பெருவிழா திருப்பலி நேற்று நடைபெற்றது.

ஆடித்திருவிழாவின் முக்கிய நிகழ்வாக அமைந்த பெருவிழா திருப்பலியில் ஆயர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வருகை தந்த ஆயிரக்கணக்கான கத்தோலிக்க பக்தர்கள், கலந்து கொண்டு மருதமடு அன்னையின் அருளை வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

பக்தர்களின் வசதிக்காக பாதுகாப்பு, சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட சிறப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் முக்கியமான கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றாக விளங்கும் மருதமடு அன்னை திருத்தலம், இன, மத வேறுபாடுகளைத் தாண்டி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து வழிபடும் ஒற்றுமையின் அடையாளமாக திகழ்கின்றது. (அ)

## “பலாலி மீள்குடியேற்ற அமைப்பு” உதயம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 03

வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தங்களது பூர்வீகக் காணிகளை மீட்டெடுப்பதற்காக, அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து “பலாலி மீள்குடியேற்ற அமைப்பு” என்ற பெயரில் புதியதொரு அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பிரதிநிதி கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி, கடந்த 36 வருடங்களாக பலாலி, மயிலிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் போன்ற பிரதேச மக்களின் குடியிருப்பு மற்றும் விவசாயக் காணிகளை இராணுவம் தன்வசம் வைத்துள்ளது.

இக்காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கடந்த காலங்களில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித சாதகமான பலனும் கிடைக்கவில்லை.

எனவே, இந்த நில உரிமைப் போராட்டங்களை இன்னும் திட்டமிட்ட வடிவில் நலிவடையாது தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கும், எமது சொந்த நிலங்களை முழுமையாக மீட்டெடுப்பதற்கும் ஏதுவாகவே “பலாலி மீள்குடியேற்ற அமைப்பு” தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் எமது நில மீட்புக்கான அனைத்துச் செயற்திட்டங்களும், போராட்டங்களும் இந்த அமைப்பின் ஊடாகவே முறைப்படி முன்னெடுக்கப்படும்.” - என்றுள்ளது. (அ)

## நான்கு மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்த சரண குணவர்தன!

கொழும்பு, ஜூலை. 03

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன, ஊழல் குற்றச்சாட்டில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு விதிக்கப்பட்ட 16 ஆண்டு கடுங்காவல் தண்டனையிலிருந்து தன்னை விடுவிக்கவும், விதிக்கப்பட்ட அபராதங்களை இரத்து செய்யவும் கோரி நான்கு மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி ரஞ்சன் டி சில்வா மூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மேல்முறையீடுகள், மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பதற்காக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டில் சரண குணவர்தன அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றியபோது, கட்டாய கொள்முதல் நடைமுறையை மீறி, குத்தகை அடிப்படையில் வாகனங்களைக் கொள்முதல் செய்து அரசாங்கத்திற்கு நிதி இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் பேரில், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நான்கு வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது.

நீண்ட விசாரணைக்குப் பின்னர், கொழும்பு உயர் நீதிமன்றம் அவரை அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளி எனக் கண்டறிந்தது. அதன்படி, ஒவ்வொரு வழக்குக்கும் நான்கு ஆண்டுகள் வீதம், அவருக்கு 16 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், 1.8 மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனுவில், முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன, தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையையும் அபராதத்தையும் உயர் நீதிமன்றம் இரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டில் பதின்ம வயதினரிடையே அதிகரிக்கும் பாலியல் நோய்கள்!

கொழும்பு, ஜூலை. 03

பதின்ம வயதினரிடையே பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் தொற்றும் போக்கு அதிகரித்து வருவதாகவும் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் ஊடக மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி, “எச்.ஐ.வி. மற்றும் எஸ்.ரி.ஐ. எனப்படும் பாலியல் ரீதியாக பரவும் நோய்கள், குறிப்பாக பதின்ம வயது இளைஞர், யுவதிகளிடையே முந்தைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஓரளவுக்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளன.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பிரிவினால் கலந்துரையாடப்பட்டதன் பின்னரும், சில பாடசாலை மாணவர்களும் சில பல்கலைக்கழக மாணவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், இது குறித்து பிரதமருடனும், சிறுவர் விவகார அமைச்சருடனும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, அரசாங்கம் என்ற ரீதியில், தொடர்புபட்ட தரப்பினரை ஒன்றிணைத்து இந்த நிலையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிலர் தாங்கள் அறியாமலேயே இதற்கு இரையாகிவிட்டதாகத் தங்களது தரப்பில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் திரைகளுக்கு அதிகமாக அடிமையாவதன் மூலம், பிள்ளைகள் பிற்காலத்தில் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு தூண்டப்படும் போக்கு காணப்படுவதாக மனநல மருத்துவர் சமிந்த வீரசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், டிஜிற்றல் திரைகளுக்கு அடிமையாவதால் மூளையில் ஏற்படும் இரசாயனக் கலவை மாற்றங்கள் காரணமாக, பிள்ளைகள் போதைப்பொருள் பயன்பாட்டை நோக்கித் தள்ளப்படலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டெங்கு உயிரிழப்பு 35 ஆக உயர்ந்தது!

கொழும்பு, ஜூலை. 03

நாட்டில் டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளதாக, தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தப் பிரிவின் தகவலின்படி, நேற்று முன் தினம் ஒரே நாளில் மட்டும் 1,025 புதிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதனையடுத்து, இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 56 ஆயிரத்து 422 ஆக உயர்ந்துள்ளது.

டெங்கு பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதால், பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரிப்பதுடன், கொசுக்கள் பெருகக்கூடிய இடங்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக சட்டமூலம் இரண்டு மாதங்களில்!

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



கொழும்பு, ஜூலை. 03

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக சட்டமூலம் இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும். பாதாளக்குழுக்களுக்கு ஆதரவளித்த அரசியல் தரப்பினர் இந்த சட்டமூலத்தை எதிர்ப்பது ஒன்றும் ஆச்சரியமல்ல என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் அநாதைகளாக இருந்தவர்கள் தற்போது சுரேஷ் சாலேயின் விவகாரத்தை கையில் எடுத்து அவருக்கு சார்பாக பேசுகிறார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் குறித்த விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் சாட்சியங்களுக்கு அமைவாகவே சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டார்.

சட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை இடைநிறுத்துமாறு ஒருதரப்பினர் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டால் விசாரணைகளை நிறுத்த முடியுமா, அவ்வாறு இடம் பெற்றால் சட்டத்தின் மீது நாட்டு மக்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள். சட்டத்தின் முன் எவருக்கும் விசேட சலுகை வழங்கப்படமாட்டாது.

சுரேஷ் சாலேயுக்காக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் அல்லது போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மக்களுக்கு போலியான விடயங்களை குறிப்பிடாமல் நீதிமன்றத்தை நாடலாம். தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்கலாம். நீதியை பெற்றுக்கொள்ளலாம்.இதில் எமக்கு எவ்வித பிரச்னையும் கிடையாது.

பயங்கரவாத தடைச்சட்டம் இந்த ஆண்டுக்குள் இரத்துச் செய்யப்படும்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக சட்டமூலம் இன்னும் இரண்டுமாத காலத்துக்குள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.